ஆறு மாத தகவல் மடல்

6 months Tamil



# ஆரம்ப அறிவுரைகள

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது குழந்தை 6 தொடக்கம் 12 மாத வயதடையும்போது கல்வி கற்பதற்கு பெரிய முயற்சிகளை எடுக்கிறது.

5 மாதங்கள் தொடக்கம் உங்களது குழந்தையின் மூளை அது கேட்கும் ஒலிகளை ஒழுங்குபடுத்தத் தொடங்குகிறது.

6-7 மாதங்களை அடையும் போது குழந்தை பிதற்றத் தொடங்கி ‘‘அப்பா’’ மற்றும் ‘‘கோகோ’’ போன்ற மழலைச் சொற்களை ஒலிக்கின்றது.

7 மாத வயதடையும் போது பொம்மைகளை எறிந்து அவற்றைத் தேடத் தொடங்குகிறது.

உங்களது குழந்தை விளையாட்டு மூலம் கற்கிறது. ஒன்றாய் விளையாடுவது, குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியம்.

குழந்தை உங்களுடன் சிறிய புத்தகங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராகிறது. நூல் நிலையங்கள் கைக் குழந்தைகளுக்கும் உரியன.

## நீங்கள் இப்போ என்ன செய்ய வேண்டும்?

ஒவ்வொரு நாளும் குழந்தையுடன் கதையுங்கள், விளையாடுங்கள். குழந்தை எதிர்செயலாற்றும் போது உங்களது மகிழ்ச்சியை ஒரு பெரிய புன்னகை மூலம் வெளிப்படுத்துங்கள்.

உங்களது குழந்தை ஏற்படுத்தும் சப்தங்களை, குழந்தை தெளிவாக கேட்கும்படி திரும்பச் ஒலித்துக் காட்டுங்கள்.

உங்களது முகபாவங்களை குழந்தை பார்க்கும் வண்ணம் முகத்தைத் திருப்புங்கள்.

‘‘ஒளித்து விளையாடுதல்’’, கை தட்டல், விரல்களைத் தட்டல், மற்றும் ஒரு பாத்திரத்திற்குள் பொம்மைகளைப் போடுதல் போன்ற ஆட்டங்களை விளையாடுங்கள்.

பகலில் பல தடவைகள் சங்கீதம் இசையுங்கள், பாடல்களையும். பாலர் பாட்டுகளையும் பாடுங்கள்.

கதைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் குழந்தையுடன் வாசியுங்கள். குழந்தை புத்தகங்களைத் தொடவும், உணரவும் உதவுங்கள்.

உங்களது உள்ளூர் நூல்நிலையத்தை அல்லது விளையாட்டுக் குழுவைச் சேரும் வழிகளைக் கண்டுபிடியுங்கள்.

## யார் உங்களுக்கு உதவி செய்ய முடியும்?

உறவினர்களும், நண்பர்களும்.

உங்களது வைத்தியர் அல்லது சமூகத் தொழிலாளி, குழந்தை கவனிப்பு அல்லது விளையாட்டுக் குழு அலுவலர்கள்.

உங்களது குழந்தைக்கு மேலதிகத் தேவைகள் இருந்தால் கூடுதலான யோசனைகளுக்கு உங்களது வைத்தியர் அல்லது குழந்தையின் பிரத்தியேகத் தொழிலாளியைக் கேளுங்கள்.

ஆரம்பச் சொற்கள் வலைத்தளம் www.earlywords.info ஐ பார்வையிடுங்கள்.

## எதிர்பாருங்கள்

அடுத்த தகவல் மடல்-உங்கள் குழந்தை 12 மாத வயதடையும்போது.

Early Words is a Children First project, funded by Families NSW ©